**செய்தி வெளியீடு எண்: 69** **நாள்: 28.01.2013**

# செய்தி வெளியீடு

ஆரோக்கியமிக்க சமுதாயத்தை உருவாக்க பாதுகாக்கப்பட்ட குடிநீர் அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே, தமிழகத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையில், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த கடலூர் நகராட்சி, புவனகிரி மற்றும் பரங்கிப்பேட்டை பேரூராட்சிகள் மற்றும் 812 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு 260 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்துவதற்கும் மற்றும் இத்திட்டத்தின் பராமரிப்பு பணிகளுக்காக வருடந்தோறும் 6 கோடி ரூபாய் வழங்குவதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதேபோன்று, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த குன்னான்டார்கோயில், கந்தர்வகோட்டை, கரம்பகுடி, திருவரங்குளம், அறந்தாங்கி, விராலிமலை, அன்னவாசல் மற்றும் புதுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சார்ந்த 1,751 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக, கொள்ளிடம் ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு, 315 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் திட்டம் ஒன்று செயல்படுத்துவதற்கும், பராமரிப்பு பணிகளுக்காக 9 கோடியே 61 லட்சம் ரூபாய் வருடந்தோறும் அளிப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள பெரியாறு, வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளில் அமையப் பெற்றுள்ள கூட்டு குடிநீர் திட்டங்களில் உள்ள 37 நீர் உறிஞ்சு கிணறுகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றினை புனரமைக்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக 1 கோடியே 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பல்லாவரம், பம்மல் நகராட்சிகள் மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள தேனி அல்லி நகரம் நகராட்சி ஆகியவற்றில் வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டங்களை தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்-III (TNUDP III) நிதியுதவியுடன் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் பல்லாவரம் நகராட்சியில் 99.95 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பம்மல் நகராட்சியில் 43.10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தேனி அல்லி நகரம் நகராட்சியில் 68.83 கோடி ரூபாய் மதிப்பிட்டிலும் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை மாநகராட்சியின் அருகில் உள்ள 42 உள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகரோடு இணைக்கப்பட்டு, சென்னை மாநகரம் விரிவாக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை மாநகராட்சியின் வார்டுகளின் எண்ணிக்கை 155லிருந்து 200 ஆக உயர்ந்துள்ளது. இதனால் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் பணிகளை மேற்கொள்வதனால் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினங்களை ஈடுகட்டும் வகையில் 15.18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை கோயம்பேட்டில் அதிக அளவு வணிக வளாகங்கள் செயல்படுவதால், நாளுக்கு நாள் கழிவுநீர் வரத்து அதிகரித்து வருகிறது. தற்பொழுது கோயம்பேட்டிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் இதனை எதிர்கொள்ளும் நிலையில் இல்லை. எனவே கோயம்பேட்டில் கூடுதலாக ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நாள் தோறும் 120 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை 76.71 கோடி ரூபாய் செலவில் கூடுதலாக கோயம்பேட்டில் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கு இந்த ஆண்டு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து 38.36 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு பெரிதும் உதவிகரமாக இருக்கும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 28.1.2013.